ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2479/47 - 2026 මාර්තු මස 10 වැනි අඟහරුවාදා - 2026.03.10

*2479/47 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் யட்டிநுவர பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

யட்டிநுவர பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், யட்டிநுவர பிரதேச சபையின் இலக்கம் 01 கொப்பேகடுவ வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஹபுகொட ரன்ஹவடி கெதர சன்மிக நீலன்த என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான யட்டிநுவர பிரதேச சபையின் இலக்கம் 01 கொப்பேகடுவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அஜித் பிரியந்த முதுகல என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

யட்டிநுவர பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ஹேவாகே தனுஷ்க நலீன் சம்பத் பிரனாந்து ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அஜித் பிரியந்த முதுகல என்பவர் யட்டிநுவர பிரதேச சபையின் இலக்கம் 01 கொப்பேகடுவ வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எச். டீ. என். சம்பத் பிரனாந்து,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
யட்டிநுவர பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2026, மாச்சு 10.

EOG 03 - 0124